பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.லிட்.

மலர்: 16] சென்னை: மார்கழி 12 (26—12—68) வியாழன் ★ வெளியூர்: மார்கழி 13 (27—12—68) வெள்ளி [இதழ்: 159

கைதிகட்குத் திருக்குறள் போட்டி!

மதுரை, டிச. 26 —

திருவள்ளுவரின் இரண்டாயிரம் ஆண்டு விழாவை யொட்டி மதுரைத் தமிழ்ச் சங்கம் சிறைக் கைதிகளுக்கெனத் திருக்குறட் போட்டியொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

மத்தியாசுக்கே வாக்களித்திடுவீர்!

காந்தியார் கண்ட குறைபாடுகள் இன்னும் நீங்கவில்லை!

நாடு முன்னேருததற்கு இதுவே காரணம்!

துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி வருத்தம்

சென்னை, டிச. 25—

"கொள்கைகள் இல்லாத அரசியல், உழைக்காமல் பெறும் செல்வம், மனச்சாட்சியைப் புறக்கணித்து அடையும் இன்பம், பண்பு இல்லாத அறிவு, நியாயம் இல்லாத வர்த்தகம், மனிதத் தன்மையற்ற விஞ்ஞானம், தியாக மனப்பான்மையோடு கூடியதாக இல்லாத வழிபாடு ஆகிய ஏழு கொடுமைகளும் உலகத்தை வருத்துவதாக காந்தியார் அன்று முன்கூட்டியே அறிந்து கூறினர். இன்றைக்கும், உலகமும் இந்தியாவும் அதே கொடுமைகளால் அல்லறுகின்றன!

"இந்தியாவில் இன்று தோன்றியுள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் இந்தக் கொடுமைகளே மூலகாரணம்; நாடு முன்னேருமலிருப்பதற்கும் இவையே காரணம்; இதை நமது நாட்டு மக்கள் விரைவில் உணர்ந்து, இந்தக் கொடுமைகளை வீழ்த்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்; அவ்வாறு செய்தால்தான் உலக நாடுகளிடையே இந்தியா உன்னதமான இடத்தைப் பெற இயலும்"

என்று துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள், காந்தியார் புகைப் படக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"காந்தியார், உழைப்பில் நம்பிக்கைக் கொண்டிருந்தார்; 'வாழ்க்கை என்பது இடைவிடாமல் செயல்படுவதே' என்று அவர் கருதினர். 'நியாயமான வழிகளைக் கடைபிடித்து நியாயமான முடிவுகளை அடைய முடியாது; ஒன்றிலிருந்து மற்றொன்றை நீக்க இயலாது; முடிவுகள் நியாயமானவைகளாக இருந்தால் வழிகள் எப்படியிருந்தாலும் பரவாயில்லை' என்ற கோட்பாட்டை காந்தியார் ஒருபோதும் ஒப்புக் கொள்ளவில்லை.

பொதுவாழ்வில் தன்னலமற்ற சேவை -- நேர்மையான நடத்தை என்ற சீரிய வழிகளைக் காந்தியார் வகுத்துத் தந்திருக்கிருர். உலக மக்கள் அனைவரும் அமைதியாகவும், இன்பமாகவும் வாழ்வதற்கான மார்க்கங்களாக அவை திகழுகின்றன."

தலைமைத் தேர்தல் அதிகாரி வருகிருர்

நாகர்கோவில் தேர்தலை நேரில் பார்வையிடுவார்

சென்னை, டிச. 25—

நாகர்கோவில் தேர்தல் ஏற்பாடுகளைப் பார்வையிடுவதற்காகத் தலைமைத் தேர்தல் ஆணையாளர் சென் வர்மா, சனவரி 5-ந்தேதி நாகர்கோவில் செல்வார்.

நாகர்கோவில் இடைத் தேர்தலுக்காக 5,10,500 வாக்குச் சீட்டுகளை ஒரு தனி லாரி மூலம் சென்னைத் தலைமைத் தேர்தல் அதிகாரி அனுப்பிவைத்திருக்கிருர். போதிய போலீசுப் பாதுகாப்புடன் இது போயிருக்கிறது.

40 உருக்குப் பெட்டிகளில் வாக்குப் பெட்டிகள் 'சீல்' செய்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தொகுதியில் பொதுத் தேர்தலின்போது வாக்காளர் எண்ணிக்கை 4,74,210; இப்போது 5,05,469 ஆக அதிகரித்துள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகள்

அவசர நிலைமை ஏற்பட்டால், சமாளிப்பதற்காகப் போலீசு ஏற்பாடுகள் விரிவாகச் செய்யப்பட்டிருக்கிறது.

சட்டம் -- அமைதி பாதுகாப்புப் பணியில் போலீசார் பாகுபாடு காட்டுவதாகக் கூறப்படுவதைப் போலீசு உயர்தர அதிகாரிகள் மறுக்கின்றனர்.

முன்னள்

காங்கிரசு அமைச்சர்கள் புரிந்த ஊழல்கள்

அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்தியது -- இலஞ்ச ஊழலில் ஈடுபட்டது -- அரசின் நிதியைத் தவருன காரியங்களுக்குப் பயன்படுத்தியது -- ஆகிய குற்றச்சாட்டுகளின்மீது மத்திய பிரதேசத்தின் முன்னள் காங்கிரசு அமைச்சர்கள், மற்றும் அதிகாரிகள்மீது விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழு தன் விசாரணையைத் தொடங்கியுள்ளது.

முன்னள் காங்கிரசு அமைச்சர்கள் சிலர் மீதான விசாரணையை முதலில் குழு எடுத்துக்கொண்டது.

அதிகாரத் துஷ்பிரயோகம், அரசு பணத்தை தவருன காரியங்களுக்குப் பயன்படுத்தியது போன்ற மிக மோசமான குற்றங்களை முன்னள் காங்கிரசு அமைச்சர்கள்மீது கண்டுபிடித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்தக் குற்றங்களைப் புரிந்தோர் நீதிமன்றத்தின்முன் நிறுத்தப்படுவர்; விசாரணைக் குழுவே இவர்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகளை நீதிமன்றங்களுக்கு அனுப்பும்.

மயக்கு மொழிகளைக் கேட்டு ஏமாந்துவிட வேண்டாம்!

இந்தி ஆதிக்கத்துக்கு மீண்டும் இடமளிக்காதீர்!

தமிழும் தமிழ் மக்களும் வாழ -- சனநாயகம் தழைத்திட -- மாநில உரிமைகள் பெருகிட காங்கிரசை முறியடிப்பீர்!

நாகர்கோவில் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு

அறிஞர் அண்ணு வேண்டுகோள்

"தமிழ்நாட்டிலிருந்து ஒழிக்கப்பட்ட இந்தி ஆதிக்கத்திற்கு மீண்டும் இடம் ஏற்படாதிருக்க வேண்டுமானல் -- தமிழ் மொழி வாழவும், தமிழ் மக்கள் வாழ்வு மலர்ந்திடவும் வேண்டுமானல் -- சனநாயகம் நிலைத்திட -- தழைத்திட வேண்டுமானல், நாகர்கோவில் இடைத்தேர்தலில் காங்கிரசை முறியடித்து, கூட்டணி வெற்றி பெறச் செய்ய வேண்டும்" என்று அறிஞர் அண்ணு அவர்கள், நாகர்கோவில் வாக்காளப் பெருமக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிருர்கள்.

அண்ணு அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:---

அன்புடையீர்,

"நாகர்கோயில் நாடாளுமன்ற இடைத் தேர்தலில், கூட்டணி வேட்பாளர் டாக்டர் மத்தியாசுக்கு வாக்களித்து வெற்றி தேடித் தரக் கேட்டுக் கொள்கிறேன்.

'உடல்நிலை காரணமாக நேரில் வர இயலவில்லை -- பொறுத்தருள வேண்டுகிறேன்.

'இருபது ஆண்டுக் காலம் எத்தனையோ கொடுமைகளைத் தாங்கித் தாங்கித் தவித்த மக்கள், 'காங்கிரசின் சர்வாதிகார ஆட்சியை மாற்றியே ஆகவேண்டும்' என்று தீர்ப்பளித்தனர் -- பொதுத் தேர்தலின்போது -- 1967-ல். தமிழ்நாட்டில் கூட்டணியினர் மகத்தான வெற்றி பெற்றனர் -- கழக அரசு அமைந்தது -- மக்களுக்கு நல்வாழ்வும் நம்பிக்கையும் மலர்ந்தன!

இடைத் தேர்தல்கள், சென்னையில் -- சங்ககிரியில் -- தென்காசியில் வந்தன; மக்கள் காங்கிரசை மீண்டும் வீழ்த்தினர்; கூட்டணிக்கு வெற்றி தேடித் தந்தனர்; ஏனெனில், 'மீண்டும் காங்கிரசு ஆட்சி ஏற்பட்டுவிடக்கூடாது' என்பதால்!

சனநாயகம் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக, இப்போது நாகர்கோவிலில் நாடாளுமன்ற இடைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது; தேர்தல் நாள் நெருங்கிக்கொண்டிருக்கிறது; இந்தத் தேர்தலிலும் மக்கள்,

"காங்கிரசு சர்வாதிகாரத்தை ஏற்க மாட்டோம் -- சனநாயகத்தைத் தழைக்கச் செய்வோம்"

என்ற உறுதியுடன், கூட்டணி வேட்பாளர் டாக்டர் மத்தியாசுக்கு வாக்களித்து வெற்றி தேடித்தரக் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் மத்தியாசு, தொகுதியில் உள்ளவர்; செல்வாக்கு மிக்க மருத்துவர்; இனிய இயல்பு கொண்டவர்; தொகுதியின் முன்னேற்றத்துக்காகத் தொண்டாற்றக் கூடியவர். அவருக்கு இராசதந்திர வேலைகள் -- அகில இந்திய அரசியல் வேலைகள் போன்றவைகள் இல்லை; முழுக்க முழுக்கத் தொகுதி வேலையையே கவனித்துச் செய்யக்கூடியவர்; உங்களோடு எப்போதும் இருப்பவர்; அவர் உங்கள் சார்பில் நாடாளுமன்றம் செல்வது, தொகுதிக்கு மிகுந்த நலன் தரும்.

இந்த இடைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி, தனது பெருந் தலைவரை நிறுத்தி வைத்திருக்கிறது; அவருடைய புகழ் ஒளியைப் பரப்பி மக்களை மயக்கிட்லாம் என்று கருதுகிறது.

இந்தத் தேர்தலின்போது வாக்காளர்கள் காங்கிரசுக்கு வாக்களித்தால், 'மீண்டும் சர்வாதிகாரத்தை நடத்த வழி கிடைக்கும்' என்று நம்புகிருர்கள்!

இருபது ஆண்டுகளாகக் காங்கிரசு சர்வாதிகாரத்தின் கொடிய பிடியிலிருந்து இப்போது தம்மை விடுவித்துக் கொண்ட மக்கள், இனியும் ஒரு முறை காங்கிரசுக்கு ஓட்டளித்து, சர்வாதிகாரம் நுழைந்திட இடமளிக்கமாட்டார்கள் என நம்புகிறேன்.

கதை ஒன்று தெரியுமல்லவா? வலிவிழந்து -- பாய்ந்து தாக்கிட இயலாத நிலையிலிருந்த கிழப் புலி, சாது வேடம் போட்டுக்கொண்டு -- பொன் காப்பு ஒன்றைக் காட்டி -- வழியே செல்பவர்களை, 'தானம் வாங்கிக்கொள்ள வருக' என்று அழைத்து, அருகே வந்தவர்களைக் கொன்று தின்றதாம்!

அந்தப் பொன் காப்புப்போல, காமராசரை, காங்கிரசுக் கட்சி காட்டுகிறது! ஏமாந்துவிடக் கூடாது! ஏமாந்துபோனல் மீண்டும் காங்கிரசு எதேச்சாதிகாரம் தலைதூக்கும்!

1947-ல், சுயராஜ்யத்துடன் ரூ. 1,600 கோடி இருப்பும் வைத்து வெள்ளைக்காரன், காங்கிரசுக் கட்சியிடம் நாட்டைத் தந்து சென்ருன்; இன்று, இருப்பு, இருக்குமிடம் தெரியாமல் கரைந்து -- இந்தியாவின் மீது 16 ஆயிரம் கோடி ரூபாய் கடன் பற்று ஏறியிருக்கிறது! வட்டி கட்டவே திண்டாட்டம்! இருபது ஆண்டுக் காங்கிரசு ஆட்சியிலே கண்ட பலன் இது!

(4-ம் பக்கம் பார்க்க)

கல்வி வளர்ச்சிக்கு ஒதுக்கும் பணத்தையும் வெட்டுவதா?

மத்திய அமைச்சரே மனம் குமுறுகிறார்

மற்ற செலவுகளைக் குறைத்துக்கொண்டாவது கல்விக்கு அதிக நிதி ஒதுக்குமாறு வற்புறுத்தல்

சென்னை, டிச. 26—

"நான்காவது திட்டத்தில் கல்விக்குச் செலவிடத் திட்டமிட்டுள்ள தொகையை, ரூ. 1300 கோடியிலிருந்து ரூ. 850 கோடியாகக் குறைத்துவிட்டால், கல்வித் துறையில் எல்லாப் பிரிவுகளிலும் வளர்ச்சி பெரும் அளவில் பாதிக்கப்படும்; இந்தத் துறைக்கு ஒதுக்கப்படும் தொகை ரூ. 1000 கோடிக்குக் குறைவாக இருக்கக்கூடாது.

"நான்காவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை, குறைந்த பட்சமாகக் கல்வியை விரிவுபடுத்தும் வேகத்துக்குக்கூட காணாது; இதனால் ஆரம்பக் கல்வி பாதிக்கப்படும்; உயர்நிலைக் கல்விக் கட்டத்தில் விஞ்ஞானக் கல்வி மேம்பாட்டுக்கோ தொழிற் பயிற்சிக்கோ போதிய பணம் இல்லாமல் போய்விடும்; உயர் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களும் பாதிக்கப்படும்; மாணவர் அதிருப்தி பிரச்சினை மோசமடையும்"

என்று, மத்திய கல்வியமைச்சர் டாக்டர் திரிகுண சென், தமது துறைக்கான ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டி அச்சம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

"கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்; கல்விக்கு ஒதுக்குவதற்காகக் கூடுதல் நிதி வசதிகளை எழுப்புவதற்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டும்; எடுத்துக்காட்டாக கல்வி 'செஸ்' விதிக்கலாம்.

கல்வித் துறை அனுப்பிய திருத்தப்பட்ட மதிப்பீட்டில் ரூ. 1,300 கோடி ஒதுக்கவேண்டுமென யோசனை தெரிவித்திருந்தது; இதில் ரூ. 900 கோடி மத்திய அரசுத் துறைக்கும், ரூ. 400 கோடி மாநில அரசுத் துறைக்கும் தர வேண்டுமெனக் கூறியிருந்தது.

துவக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி ஆகியவற்றைத் தேசியமயமாக்குதல், உயர் கல்வியை மேம்பாடு செய்தல், தேசிய ஒருமைப்பாட்டுக்கான வேலைத் திட்டங்கள், விஞ்ஞானக் கல்வியை விரிவுபடுத்தி மேம்பாடு செய்தல், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை தர வேண்டுமென்றும் அது கூறியிருந்தது.

ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களை அதிகரிப்பதற்காகத் திட்டச் செலவுக்குப் புறம்பாக ரூ. 200-கோடியிலிருந்து ரூ. 300 கோடிவரை செலவிடவேண்டும் என்றும் கூறியிருந்தது."

"பிற மேம்பாட்டுப் பணிகளுக்காக ஒதுக்குவதைக் குறைத்துக் கொண்டாவது கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும்" என்று குழு உறுப்பினர்கள் ஏகமனதாகக் கருத்து தெரிவித்தனர்; 'கல்வி வளர்ச்சி ஏற்படாவிடில் பொருளாதார முன்னேற்றத்தில் போதிய வேகம் காணமுடியாது' என்றனர்.

"நடைமுறை பூர்வமான நேரத்தில் இதை அணுகவேண்டும்" என்று சில உறுப்பினர்கள் வலியுறுத்தினர்; 'கல்வித் துறைக்கு உரிய நிதி வசதி கிடைக்காவிட்டால்கூட, வீண் செலவுகளைக் குறைத்துக்கொண்டு, கிடைக்கும் பணத்தைச் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்" என்றார்கள்; 'அவசியமானால், மேற்கொள்ளவேண்டிய பணிகளின் வரிசைக்கிரமத்தை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்' என்றார்கள்; 'கல்விக்கு அடிப்படையே ஆரம்பக் கல்விதான். அதை வளர்ச்சியுறச் செய்யவேண்டும் -- அதற்கு இன்னும் நிறையப் பணம் செலவிடவேண்டும்' என்றார்கள்.

அந்தியூர் தொகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர்

மக்கள் குறைகளை கேட்டறிந்தார்

அந்தியூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜே. எஸ். பாங்கோ அவர்கள், டிச. 16, 17 ஆகிய நாட்களில் சுற்றுப்பயணம் செய்தார்.

டிச. 16-ஆம் நாள் காலை 10-30 மணிக்கு சங்கராபாளையம் நடுநிலைப் பள்ளிக் கட்டிடத்தை ஊராடசி ஒன்றியத் தலைவர் திரு. கே. கே. சுப்பிரமணியம் தலைமையில் பாங்கோ திறந்து வைத்தார்.

சங்கராபாளையம் ஊராட்சித் தலைவர் எஸ். சி. வேலப்பன் வரவேற்புரை வாசித்தளித்தார்.

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் இ. எம். நடராசன், ஊராட்சிகளுக்கு வானொலிப் பெட்டிகளை வழங்கி. சிறப்புரையாற்றினார்.

ஒன்றிய ஆணையர் டி. கே. வெங்கடாசலம் நன்றி கூறினார்.

பிறகு கலெக்டர் அவர்கள் காடுகள் நிறைந்த பர்கூர் மலைப் பகுதிக்குச் சென்று தாமரைக்கரை, பர்கூர், தட்டக்கரை ஆகிய இடங்களில் மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். வேலாம்பட்டி காட்டு நிலங்களைப் பார்வையிட்டார்.

மறுநாள் காலை அந்தியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மக்களின் பல்வேறு குறைகளையும் பிற்பகல் எண்ணமங்கலம் சென்ற மக்கள் குறைகளையும் கேட்டறிந்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் கோபி கோட்டாட்சித் தலைவர் கே. மலைச்சாமி, இ. எம். நடராசன் எம்.எல்.ஏ., திரு. கே. கே. சுப்பிரமணியம் ஆகியோரும் சுற்றுப்பயணம் செய்தனர்.

அடிப்படை உரிமைக்கு ஆபத்து

அரசியல் சட்டத்துக்கு முரணான செயல்

வேலை நிறுத்தத் தடை மசோதா -- தில்லைவில்லாளன் கண்டனம்

புதுடில்லி, டிச. 23—

"அரசாங்க இன்றியமையாத் துறைகளில் பணியாற்றுவோர் வேலை நிறுத்தம் செய்வதைத் தடை செய்யும் அவசர உத்தரவும், நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவும், அரசியல் சட்டம் மக்களுக்கு அளித்திருக்கும் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதாக இருக்கிறது; அல்லது, அந்த உரிமைகளைக் குறைப்பதாக இருக்கிறது.

"இம்மசோதா அரசியல் சட்டத்திற்கு முரணானது; அது தரும் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதோடன்றி அரசியல் சட்டத்தையே மீறுவதாக இருக்கிறது; இதுபற்றி அட்டர்னி-ஜெனரலின் கருத்தைக் கேட்டறிய வேண்டும்"

என்று, நாடாளுமன்ற மேலவையில் கழக உறுப்பினர் தில்லைவில்லாளன், மசோதாமீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் கருத்தறிவித்தார்.

மத்திய அரசு ஊழியர்களின் வேலைநிறுத்தங்களைத் தடை செய்ய மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்கும் மசோதா பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கூச்சலும் குழப்பமும் நிலவின; இறுதியில் ஜனசங்கம், சுதந்தரா நீங்கலாக மற்றெல்லா எதிர்க் கட்சிகளும் வெளிநடப்புச் செய்தன.

மசோதாமீது விவாதத்தைத் தாமதப்படுத்த எதிர்க் கட்சியினர் முயற்சி செய்தனர்; இந்த முயற்சி நான்கு மணிநேரம் நீடித்தது. இந்த நான்கு மணி நேரத்திலும் சரமாரியாகப் பல ஒழுங்குப் பிரச்சினைகளை அவர்கள் எழுப்பினர்.

கல்வியமைச்சர் யோசனைக்கு வரவேற்பு

கும்பகோணம் வரி செலுத்துவோர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் 15—12—68-ல் திரு. கே. முகம்மது இப்ராகிம் தலைமையில் நடைபெற்றது; திரு. பி. கே. டி. சண்முகம் அனைவரையும் வரவேற்றார்.

அதுபோது, நிர்வாக வசதியை முன்னிட்டுத் தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்துக் கும்பகோணத்தைத் தலைநகரமாக்குமாறு தமிழக அரசினரைக் கேட்டுக்கொண்டும், மாணவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்தறிந்து அவற்றை அகற்றும் பொருட்டு ஒவ்வொரு கல்வி நிலையங்களிலும் 'மாணவர் கோர்ட்' நிறுவலாம் என கல்வி அமைச்சர் கூறிய யோசனைக்கு வரவேற்புத் தெரிவித்தும், அதைச் செயல்படுத்த முனவருமாறு கல்வி நிலைய நிர்வாகத்தினரைக் கேட்டுக் கொண்டும், அகில இந்திய வானொலியில் ஆங்கிலச் செய்தி அறிக்கைக்கு முன்னதாக இந்திச் செய்தி அறிக்கை ஒலிபரப்பப்படுவதை வன்மையாகக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

திரு. இரா. வேதராமன் நன்றி கூறினார்.

அண்ணாவை சந்தித்தார் புதுவை மாவட்டச் செயலாளர்

சென்னை, டிச. 26—

புதுவை மாவட்ட தி. மு. க. செயலாளர் எம்.ஏ. சண்முகம் அவர்களும் மற்றும், நகராட்சித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள கழகத் தோழர்கள் மணவெளி சுப்பராயன், அரியாங்குப்பம் ஆ. கந்தசாமி, கணபதி செட்டிகுளம் கோ. சீனிவாசன் ஆகியோர் டிச. 20-ம் நாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்து மாலையணிவித்துத் வாழ்த்துப் பெற்றுச் சென்றனர்.

அண்ணா சிகிச்சை நிதி

பெயர் சூட்டுவிழாவில் அன்பளிப்பு

பம்பாய் - தாராவிப் பகுதியில் நடைபெற்ற அழகியபாண்டியபுரம் முத்து—அம்பிகாபதி ஆகியோரின் ஆண் மகவுக்கு, 'இராமச்சந்திரன்' எனப் பெயரிட்டதன் நினைவாக, விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிய தாராவி தி. மு. கழகச் செயலாளர் த. மு. பொற்கோ அவர்களிடம் அண்ணா சிகிச்சை நிதிக்காக ரூ 15 அன்பளிக்கப்பட்டது. அத்தொகை, தலைமை நிலையப் பொருளாளர் கருணாநிதி அவர்களுக்கு தோழர் பொற்கோ மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அண்ணா சிகிச்சை நிதி

கள்ளக்குறிச்சி வட்டத்தில் அளிக்கப்பட்ட விவரம்

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் கள்ளக்குறிச்சி வட்டத்தில் கலந்துகொண்ட பொதுக்கூட்டங்களில் அளிக்கப்பட்ட நிதி - (24-12-68 'நம்நாடு'இதழில் வெளியாகியுள்ள தொகை) ரூ. 1,161.10-க்கான விவரம் வருமாறு :–

டி. கேசவலு எம்.எல்.ஏ.	251.00
கணியாம்பூர் இராமசாமி	100.00
வட்டச் செயலாளர் மாரியப்பன்	100.00
முடியனூர் தி.மு.க. கிளை	51.00
தேவபாண்டலம் ந. நாச்சியப்பன்	51.00
சிருவங்கூர் வேலாயுதம்	50.00
தியாகதுருகம் பி. இராமகிருஷ்ணன்	35.00
தொட்டியம் செல்லப்பிள்ளை	25.00
அரசம்பட்டு முத்தையன்	25.00
கள்ளக்குறிச்சி நாகராசன் பி.ஏ.பி.எல்.	25 00
மேலூர் தி.மு.க. கிளை	25.00
வடக்கனந்தல் நிலமற்றோர் சங்கம்	25.00
சின்னசேலம் நிலமற்றோர் சங்கம்	25.00
நாகலூர் நடராசன்	25.00
சங்கராபுரம் எம். முனுசாமி	21.00
தச்சூர் தங்கவேலு	21.00
சின்னசேலம் அண்ணாமலை பிள்ளை	20.00
பரமநத்தம் வையாபுரி	20.00
அவைத் தலைவர் செல்லக் கருப்பன்	16 00
வளையாம்பட்டு நல்லான்	11.00
சங்கராபுரம் பேரூர் ஆட்சி மன்றத் தலைவர்	11.00
சிறுவள்ளூர் சின்ன வேலாயுதம்	10.00
விருதாவூர் ரங்கசாமி	10.00
,, தங்கவேலு	10.00
இராமராசபுரம் அப்துல் சத்தார்	10.00
எஸ். வி. கோபால்	10.00
ஆலத்தூர் அமாவாசியா பிள்ளை	10.00
சின்னசேலம் அல்லாபிச்சை	10.00
,, பூபதி கவுண்டர்	10.00
,, நல்லியப்ப கவுண்டர்	10.00
ஜலீல் பாய்	10.00
எஸ். கேசவலு	10.00
புத்தராம்பட்டு பி. எம். சுப்பராயன்	10.00
கள்ளக்குறிச்சி கி. வேணு	5.55
,, டி. முத்து	5.55
அரசம்பட்டு பாண்டியன்	5.00
தெங்கியாநத்தம் கோவிந்தன்	5.00
அம்மாபேட்டை கிருட்டினன்	5.00
சங்கராபுரம் கே. மாணிக்கம்	5.00
புதுப்பட்டு கணபதி	5.00
அரசம்பட்டு தங்கவேலு	5.00
வாணியேந்தல் மண்ணுங்கட்டி	5.00
தொரசலூர் குழந்தைவேல்	5.00
பெருமங்கலம் சுப்பிரமணிய உடையார்	5.00
எரவாலூர் சுப்பிரமணியம்	5.00
மடூர் கந்தசாமி பிள்ளை	5.00
தண்டலை விருத்தாசலம் ஐயர்	5.00
இந்திலி பெருமாள்	5.00
மேலூர் பழனிமுத்து	5.00
சின்னசேலம் அண்ணா மன்றம்	5.00
,, ரங்கராசு	5.00
ரூ. 2 வீதம் அளித்தோர்:— எலவடி பெருமாள், ராயபாளையம் இராமசாமி, சிகைத் தொழிலாளி இராமகிருஷ்ணன், வெங்கடாசலம்	8.00
ரூ 1 வீதம் அளித்தோர்:— சின்னமுத்து, அளப்பளம் பிச்சைமுத்து, சனி, பாலு, வேலாயுதம், வீராசாமி, சித்தன், இராமசாமி கவுண்டர், வடக்கனந்தல் சலியபெருமாள்	9.00
ஆக மொத்தம்	**ரூ. 1,161.10**

செங்கற்பட்டு மாவட்டத்தில் 2,000 குழாய்க் கிணறுகள்

தரைக்கடியில் உள்ள நீரைப் பயன்படுத்த அரசு திட்டம்

இதுவரை விவசாயிகளுக்கு ரூ. 50-இலட்சம் கடனுதவி

காஞ்சீபுரம், டிச. 26—

"செங்கற்பட்டு மாவட்டத்தில் விவசாயிகளுக்குப் பம்பு செட்டுகளுக்காகவும் டிராக்டர்களுக்காகவும், இதுவரையில் ரூ 50 இலட்சம் கடனுதவி அளிக்கப்பட்டிருக்கிறது"

என்று மாவட்டக் கலெக்டர் இலட்சுமிகாந்தன் பாரதி, நிருபர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"நில அடமான பாங்கி ரூ 45 இலட்சம்; சிண்டிகேட் பாங்கி ரூ. 2.50-இலட்சம்; விவசாயத் தொழில்கள் கார்ப்பரேஷன் ரூ. 1.50-இலட்சம் அளித்ததைக் கொண்டு இக்கடனுதவி வழங்கப்பட்டது.

மாவட்டத்தில் விவசாய வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட முக்கியமான அம்சம், தரைக்கு அடியில் 50-அடிக்கும் கீழே உள்ள தண்ணீரை வெளியில் கொண்டு வருவதற்காக 3-ஆண்டுகளில் 2,000 குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கான ஒரு தீவிரத் திட்டமாகும்; இதுவரையில் அம்மாதிரி 200 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன; ஒவ்வொரு கிணற்றுக்கும் ரூ 8,000-வரை கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது; இதில் ரூ. 500 மானிய உதவியாக இருக்கும்."

வானிலே சுற்றிவரும் ஆய்வுக்கூடம்

தரையிலிருந்தவாறே கருவிகட்குக் கட்டளை

வாஷிங்டன், டிச. 26—

ஓ. ஏ. ஓ.-2 (விண் வீதியில் சுற்றி வரும் வானிலை ஆய்வுக்கூடம்) கோளிலுள்ள ஆறு விண்மீன் ஆய்வுக் கருவிகளை தரை நிலையத்திலுள்ள இயக்குநர்கள் இயக்கினர்.

விண்வெளியிலிருந்து விண் மீன்களை ஆராயும் புதுமைப் பணி இது. இதுவரை இத்தகைய பணி மேற்கொள்ளப்பட்டதில்லை.

அமெரிக்க விண்வெளி நிலையம் ('நாசா) சொன்னதாவது:—

"கருவிகளிலே மூன்று திட்டமிட்டபடி விண்மீன்களை ஆராயும்படிக் கட்டளை பெற்றுள்ளன. இவற்றின் மின் அணுக் கருவிகள் நன்றாக இயங்குகின்றனவா என்று பார்த்துக் கொள்ளும்படி மற்ற மூன்று கருவிகளுக்கும் கட்டளையிடப்பட்டன.

ஓ. ஏ. ஓ.-2 மிகப் பளுவான -- சிக்கலான கருவிகள் நிறைந்த விமானிகள் இல்லா செயற்கைக் கோள்; இவ்வளவு பளுவான கோளை அமெரிக்கா இதற்குமுன் செலுத்தியதில்லை.

மனிதனைத் தொன்றுதொட்டு திகைக்க வைத்து வரும் பிரபஞ்சத்தின் பிறப்பு -- வயது -- நிலைமை -- எதிர்காலம் பற்றிய புதிய தகவல்களை ஓ. ஏ. ஓ. தரும் என்று வானியல் வல்லுநர்கள் நம்புகின்றனர்.

‘அரசியல் அநாகரிகப் போக்கை மாற்றிக் கொள்ளுங்கள்’

‘இல்லையேல் அடுத்த தேர்தலில் அடியோடு அழிந்து போவீர்கள்’

தமிழ்நாட்டுக் காங்கிரசாருக்கு க. அன்பழகன் எச்சரிக்கை

அறிஞர் அண்ணாவின் தலைமை தமிழகத்திற்குக் கிடைத்திருப்பது பற்றிப் பெருமிதம்!

சென்னை, டிச. 23—

“பேரறிஞர் அண்ணா அவர்களைப்போல் ஒரு நல்ல முதலமைச்சரை இதுவரை இந்த நாடு கண்டதில்லை—இனியும் காணப் போவதில்லை; அத்தகைய அண்ணா அவர்களின் தலைமையிலே இயங்கும் தமிழக அரசை, வடக்கேயுள்ளவர்களெல்லாம் வாயார வாழ்த்துகிறார்கள்; மனம்விட்டுப் பாராட்டுகிறார்கள்; ஆனால் இங்குள்ள காங்கிரசாரோ, அண்ணாவையும், அவர் ஆட்சியையும் தூற்றுவதையே தொழிலாகக் கொண்டுள்ளனர்.

“தமிழகத்தில் எதிர்க் கட்சியாக உள்ள காங்கிரசார் ஆளும்கட்சிக்கு மட்டும் எதிர்க் கட்சியாக இல்லை — காங்கிரசுக் கட்சிக்கே எதிர்க் கட்சிபோல் செயல்பட்டு வருகின்றனர். அவர்களுடைய செயல்களெல்லாம் காங்கிரசையே அழிக்கத்தான் பயன்படும்”

என்று, நாடாளுமன்ற மக்களவை தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் நேற்று கோடம்பாக்கத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் இடித்துரைத்தார்.

மூன்றாவது முறையாக மாநகராட்சிமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தோழர் சா. கணேசனையும், 114-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் சோ. கி. மூர்த்தியையும் பாராட்டவும் வெளிநாடு சென்று திரும்பிய பேராசிரியர் அன்பழகன் அவர்கட்கு வரவேற்பு அளிக்கவும், பகுத்தறிவுக் கலைமன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சிவன்கோயில் தெற்குத் தெருவில் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஆர்காட்டுச் சாலையிலிருந்து மேடை வரை தெருவின் இருமருங்கிலும் மின்குழல் விளக்குகள் பொருத்தப்பட்டு வீதியே பட்டப் பகலெனக் காட்சியளித்தது.

முகப்பில் அலங்காரப் பந்தல் போட்டு, பெரிய இரு வண்ணக் கொடி பறந்துகொண்டிருந்தது.

வரவேற்பு பேனர்களும், கொடி தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன.

கூட்டத்திற்குத் தோழர் கி. வீராசாமி தலைமை வகித்தார்.

சட்டமன்ற உறுப்பினர் ந. வீராசாமி, மாவட்ட தி. மு. க. அவைத் தலைவர் காஞ்சி மணிமொழியார், மா. செங்குட்டுவன், தோழியர் ஏ. பி. மனோன்மணி, க. துரை, செ. கண்ணப்பன், க. மதனகோபால், க. வசந்தராசன், புலியூர் இராதா, எம். எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

தோழர்கள் சா. கணேசனும், சோ. கி. மூர்த்தியும் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

பேராசிரியர் அன்பழகன் அவர்கட்கு ஆள் உயர ரோஜாப் பூமாலை அணிவிக்கப்பட்டு — பெரிய அளவிலான வரவேற்பு மடலும் படித்தளிக்கப்பட்டது; மற்றும் ஏராளமான மலர் மாலைகளும் கைத்தறியாடைகளும் அணிவிக்கப்பட்டன.

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பேசியதாவது:—

“இங்கு சா. கணேசனையும் சோ. கி. மூர்த்தியையும் பாராட்டுகிறீர்கள் என்றால் அவர்களுக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கிறீர்கள் என்று பொருள்.

இவர்கள் கண்ணியமிக்க நல்ல பொதுநலத் தொண்டர்கள்! கழகத்தில் சேர்ந்த நாள் முதல் உண்மையாகப் பாடுபட்டு வருவோர்.

நானறிந்து, பழகிய வகையில் இந்த இரு வட்டங்களின் மக்கள் நல்ல மாநகராட்சிமன்ற உறுப்பினர்களைப் பெற்றிருக்கிறார்கள் என்றே சொல்வேன்.

பொதுத் தொண்டாற்ற அவர்கள் மாநகராட்சிமன்றம் சென்றுள்ளனர்; அது ஏதோ பெரிய பதவியல்ல; பொதுத் தொண்டு செய்வதற்கே இந்தப் பதவிகள் எல்லாம்.

பொதுத் தொண்டு செய்கிறவர்களால் அப்பதவிகளே மதிப்பைப் பெறுகின்றன; சிலரது செயல்களால் அப்பதவிகள் மதிப்பை இழப்பதும் உண்டு.

ஒரு கணக்குப் பிள்ளை நல்லவராக இருந்தால், ‘அவரைப்போல் உண்டா?’ என்று மக்கள் சொல்லக் கேட்கிறோம்; ஒரு கலெக்டர் நல்லவராக இல்லையென்றால், ‘அவனும் கெட்டான் — அவன் பதவியும் கெட்டது’ என்று அதே மக்கள் சொல்வதையும் கேட்கிறோம்.

எனவே, யார் எந்தப் பதவியில் இருக்கிறார்கள் என்பதைக் காட்டிலும், ‘நல்லவர்களா — கெட்டவர்களா? சோம்பேறிகளா — சுயநலமிகளா?’ என்று பார்க்க வேண்டும்.

இங்கு மாநகராட்சித் தேர்தல் நடந்த நேரத்தில், இவர்களைப் பற்றிக் காங்கிரசார் தூற்றிப் பேசியதாகக் கூறினார்கள்; அறிஞர் அண்ணா அவர்களையே தூற்றிப் பேசுகின்ற அளவுக்கு வன்னெஞ்சம் கொண்டவர்களாயிற்றே அவர்கள்! அண்ணா இங்கு மருத்துவமனையிலிருந்த நேரத்தில், சி. சுப்பிரமணியம் மட்டுமல்லாமல் எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமனும் வந்து பார்த்துச் சென்றார்; அமெரிக்காவுக்கு அவரை வழியனுப்பி வைத்தார்கள்; அவர் போய் வந்த பிறகு சிகிச்சைக்கான செலவு பற்றிக் கணக்குப்பேச ஆரம்பித்திருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் இத்தகையோர் பேச்சுப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள்; அது எத்தனைக்கோடி செலவானாலும் தமிழ் மக்கள் கொடுப்பார்கள்; ‘கழகப் பொருளாளர்’ என்கின்ற முறையில் கருணாநிதி அவர்கள் வெளியிட்ட வேண்டுகோளை ஏற்று மக்கள் அள்ளிக் கொடுத்துவருகின்றனர்; ஆனால் இங்குள்ள காங்கிரசார், அந்த அளவுக்கு மனப்பக்குவம் பெறாத காரணத்தால், தவறாகப் பேசிவருகிறார்கள்!

வடக்கேயுள்ள காங்கிரசுத் தலைவர்கள் அறிஞர் அண்ணாவின் ஆட்சியை அறிவாற்றலைப்பற்றி வியந்து வியந்து பேசுகிறார்கள்.

அமெரிக்காவுக்கு வந்த இந்திரா காந்தி, சிகிச்சை பெற்றுவரும் அறிஞர் அண்ணாவை வந்து பார்க்காவிடில் தம் பணி செம்மையுறாது என்றுணர்ந்து அண்ணாவை வந்து பார்த்தார்; ‘ஆட்சித் திறனும் கண்ணியமும் மிக்க அண்ணா அவர்கள் விரைந்து குணமடைய வேண்டும்’ என்று கூறி, அதற்கு உதவிகளும் அளிக்கப்படவேண்டும் என்று தூதரகத்தாரிடம் கூறிச் சென்றார்.

மிக அழுத்தமானவர் — ‘இந்தியைத் திணித்தே தீருவேன்’ என்று கடுமையாக இருப்பவர் — என்று பெயரெடுத்த மொரார்ஜி தேசாய்கூட அமெரிக்கா வந்தபோது, அண்ணா அவர்களை வந்து கண்டார்; ‘எப்படியாவது அண்ணா அவர்கள் முழு நலன் பெறவேண்டும்’ என்று அவர் கூறிச் சென்றார்.

ஆனால் இங்கேயுள்ள காங்கிரசாரோ வேறுவிதமாகப் பேசிவருகிறார்கள். இங்குள்ள காங்கிரசு எதிர்க் கட்சியினர், காங்கிரசுக்கே எதிர்க் கட்சியினராவர்! காங்கிரசையே அவர்கள் வாழவிடமாட்டார்கள்!

அண்ணாவைப் பற்றியே பேசுகிற அவர்கள், கருணாநிதியைப் பற்றியோ மற்றவர்களைப் பற்றியோ பேசுவதில் என்ன வியப்பு இருக்கமுடியும்!

காங்கிரசுக்காரர்கள் தைரியமானவர்கள் என்றால், அவர்கள் ஆட்சிக் காலத்தில் நடந்த ஊழல்களைப்பற்றிக் கழகத்தினர் பகிரங்கமாக எடுத்துக் கூறிவருகிற குற்றச்சாட்டுக்களை மறுத்து, மானநட்டம் ஏற்பட்டுவிட்டதாக வழக்காடவேண்டும். குற்றச்சாட்டுக்களை நீதிமன்றத்தின் ஆய்வுக்கு உட்படுத்த அவர்கள் தயாராக இல்லை; அப்படிப்பட்ட காங்கிரசார், ஏழைகளுக்காக நடக்கிற தி. மு. கழக ஆட்சியின்மீது குற்றஞ்சாட்டுகிறார்கள்.

கூறப்படுகிற குறைகளைப் பிரித்துப் பார்த்தால் அவைகளில் பல, பத்தாண்டுகளாக நம் சமுதாயத்தில் இருப்பவையே!

சில பண்டங்களின் விலை கூடுதலென்றால், பதுக்கல் காரணமாக அவை ஏற்படக்கூடும். போலீசுத் துறையினர் இன்னும் சற்றுச் சுறுசுறுப்பாக இருந்தால் அவை குறையும்!

அறிஞர் அண்ணா அவர்களை இங்கு திருப்பி அனுப்பிய நேரத்தில், ‘குறைந்தது மூன்று திங்களாவது அவர் நல்ல ஓய்வு பெறவேண்டும்; உழைப்பை அதிகரித்துக்கொள்ளக்கூடாது’ என்று மருத்துவர்கள் கூறி அனுப்பினர்.

அண்ணாவுக்கு இப்போது நோய் நீங்கியுள்ளது — ஆனால் வலிவு ஏற்படவில்லை. இந்த நிலையிலும் அவர் நதி நீர்ப் பங்கீடுபற்றி மூன்று மணி நேரம் நம்பூதிரிபாடுடன் பேசினார்; அப்போது அவர் களைத்துப் போயிருந்தார்.

தமிழக அரசு, தான் நிறைவேற்ற விரும்புகின்ற பல முக்கிய திட்டங்களைச் செயலாக்க முடியாமலிருக்கிறது; அதற்குக் காரணம், டில்லி அரசாங்கம் கடந்த மூன்றாண்டுகளாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டாமல் இருப்பதேயாகும். தமிழக அரசு கருதிய பெரிய திட்டங்கள் எதையும் கொண்டுவர இயலவில்லை. அவற்றில் ஒன்றுதான் சேலம் இரும்பாலை என்பது மக்களுக்குத் தெரியும்.

‘தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி இல்லை’ என்று கூறுகிறார்கள்; தொழில் வளர்ச்சியடையாததற்குக் காரணம் மத்திய அரசுதான்; முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் ரூ. 39,000 கோடி செலவழித்தும் பலன் இல்லை என்றால் என்ன பொருள்? காங்கிரசு ஆளுகின்ற மத்திய அரசு, ‘கையாலாகாத அரசு’ என்று பொருள்?

அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து போன்ற நாடுகளிடம் கடன் வாங்கியும் 1966-ல் நிறைவேற்றப்பட வேண்டிய நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் தொடங்கப்பெறவில்லை என்றால், இது காங்கிரசின் திறமையின்மையைத்தானே காட்டுகிறது?

நாட்டில் வறுமை இருப்பதற்கு — வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதற்கு — தொழில் வளர்ச்சி ஏற்படாததற்கு மத்திய அரசே காரணம்.

ஆயினும், தமிழ்நாட்டில் இருக்கும் தொழில்கள் சீராக இயங்கிடவும், வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்திடவும் தன்னாலான அனைத்தும் மாநில அரசு செய்துவருகின்றது. இந்த நிலையில் மாநில அரசு பாராட்டப்பட வேண்டும். காங்கிரசார் பாராட்டாவிட்டாலும் சும்மாவாகிலும் இருக்கலாம்.

அகில இந்தியாவில் தமிழ்நாடு ஒரு பகுதியே; இதற்கு உடன்பட்டே ஒத்துழைத்து வருகிறோம். இந்தியாவின் பிற பகுதிகளில் ஏற்படுகின்ற நிலைமைகளால் தமிழ் நாட்டிலும் விளைவுகள் ஏற்படக் காணுகிறோம்.

இப்படி எத்தனையோ விளைவுகள் மற்றவர்களால் நம் தலையில் திணிக்கப்படுகின்றன. இவற்றின் விளைவுகளிலிருந்து அண்ணா அவர்கள் நம்மை மெள்ள மெள்ள மீட்டு வருகிறார்.

இத்தகைய நேரத்தில்தான் ‘சும்மாயிருந்த சங்கை ஊதிக் கெடுத்தான்’ என்பதுபோல, ‘இந்திச் செய்தி அறிவிப்புக்கு வானொலியில் முதலிடம்’ என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் போராட்டம் பற்றி வாய்கிழியப் பேசுகிறார்கள்; அவர்களுக்கு ஒன்று சொல்லுவேன்—தமிழ்நாட்டு மாணவர்களைப் போன்ற நல்லவர்கள் உலகிலேயே வேறு எங்கும் கிடையாது; அவர்களைப் போராடத் தூண்டுவதெல்லாம் காங்கிரசுக்காரர்களின் மக்கள் விரோதச் செயல்கள்தான்!

அமைதியாய் இருந்த மாணவர் உலகம் இன்று கொதித்து எழுகிறது என்றால், அதற்கு மத்திய அரசின் மொழி வெறியும், இந்தித் திணிப்பும்தான் காரணம்; மேலும் மற்ற மாநிலங்களில் நடைபெறும் மாணவர் போராட்டமும் இதற்குக் காரணமாகும்.

ஆகவே, இன்று தமிழ்நாட்டில் ஏற்படும் எல்லா அசம்பாவிதங்களும் மத்திய அரசாலும் இங்குள்ள பொறுப்பற்ற காங்கிரசுக்காரர்களாலும்தான் ஏற்படுகிறது.

அண்ணா அவர்கள் கேட்கும் ஒத்துழைப்பெல்லாம், இந்த நாட்டுக்காகவும், மக்களுக்காகவும், மொழிக்காகவும் பண்பாட்டுக்காகவும்தான்!

அறிஞர் அண்ணா அவர்களைப் போன்ற சிந்தனையாளர் — மக்கள் நலத்தை பேணுபவர்—மக்களுக்காக அல்லும் பகலும் பாடுபடுபவர்—மொழிக் காவலர்—இத்தமிழகத்தில் இதற்குமுன் இருந்ததுமில்லை—இனி இருக்கப் போவதுமில்லை!

ஆகவே, மக்கள் அனைவரும் காங்கிரசுக்காரர்களின் பொய்ப் பிரச்சாரத்திற்கு இதுவரை மதிப்பளிக்காதது போலவே இனியும் அவைகளை ஒதுக்கித் தள்ளி, தமிழ் வாழ—தமிழர் நிலை உயர—சேலம் இரும்பாலை வர—தூத்துக்குடித் துறைமுகம் விரைவில் ஏற்பட — அண்ணாவின் அரசுக்குப் பக்கபலமாய் இருந்து ஆதரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அறிஞர் அண்ணாவையும், தமிழக அரசையும் அநாகரிகமாகப் பேசிவரும் காங்கிரசுக்காரர்களின் இழிதன்மையை மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள்.

காங்கிரசார் தங்கள் அநாகரிகப் போக்கை மாற்றிக்கொள்ளாவிட்டால் 1972-ல் பொதுத் தேர்தல் தங்கள் முகவரிகூட இல்லாத முறையில் படுதோல்வியடைவது உறுதி.”

3 வயதிலேயே படிப்பு!

குழந்தைகளுக்கு மூன்று வயதாகும்போதே படிப்புச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்துவிடும் வழக்கம் மேற்கு ஜெர்மனியில் கையாளப்பட்டு வருகிறது.

முறையாகவும், அக்கறையோடும் கற்பித்தால் மூன்று வயதிலேயே குழந்தைகள் சிறந்த முறையில் கல்வி கற்கத் தொடங்கிவிடுவார்கள் என்று மேற்கு ஜெர்மன் கல்வி நிபுணர்கள் கூறுகின்றனர்.

மூன்று வயதுக் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டும் திட்டம் ஒன்றை மேற்கு ஜெர்மனியில் பிராங்க்பர்ட் நகரில உள்ள ஒரு பல்கலைக் கழகம் வகுத்துத் தந்துள்ளது; இத்திட்டத்தின்படி, குழந்தையின் பெற்றோர்களே அதற்கு ஆசிரியர்களாக இருந்து படிக்கக் கற்றுக்கொடுத்துவிட முடியும்.

சென்னை 22-வது வட்ட முத்தமிழ் நற்பணி மன்றம்

மேற்படி மன்ற நிர்வாகிகள் தேர்தல் 8—12—68-ல் கிளைக் கழகச் செயலாளர் து. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—தலைவர்: கே. செல்வம்; செயலாளர்: சி. எம். கிருஷ்ணன்; துணைச் செயலாளர்: எம். செல்வராஜ்; பொருளாளர்: கே. கோவிந்தன்; மற்றும் 11-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

சென்னை 115வது வட்ட சத்தியவாணிமுத்து மன்றம்

17—12—68-ல் புலவர் அ. அப்துல் கரீம் தலைமையிலும் — வட்ட மாநகராட்சி உறுப்பினர் கோ. அய்யாவு முன்னிலையிலும் மேற்படி மன்றத்திற்கு மு. பரமசிவன் செயலாளராகவும், நா. பாண்டுரங்கன் துணைச்செயலாளராகவும், சி. மா. சாமிக்கண்ணு பொருளாளராகவும் மற்றும் எழுவர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

டாக்டர் மில்லர் நற்பணி மன்றத் துவக்க விழா

18—12—68-ல், சேலம் — செவ்வை நகர் (6, 11-வது வட்ட) தி. மு. க. சார்பில் டாக்டர் மில்லர் நற்பணி மன்றத் துவக்க விழாவும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு திரு. தம்பி சண்முகம் தலைமைவகித்தார்.

தோழர்கள் நெல்லை ஆ. திராவிடமணி தமிழக அரசின் சாதனைகளையும், அறிஞர் அண்ணாவின் பண்புகளையும், காங்கிரசாரின் போக்குகளையும் விளக்கிப் பேசினார்.

மற்றும் சட்டமன்ற உறுப்பினர் க. செயராமன், நகரச் செயலாளர் சி. பழனியப்பன் எம்.சி., அன்புமணி, இராசமாணிக்கம் ஆகியோர் பேசினர்.

கலைக் குழு முகவரி

இளம்பரிதி கலைக் குழுவினரின் ‘காந்திக்குப்பின் அண்ணா’ இசை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்புகொள்க:—

கோ. மா. இளஞ்சோழன் 30/95, சித்தி விநாயகர் கோவில் வீதி, கோவை-1.

இரங்கல்

சென்னை 22-வது வட்ட தி.மு.க. உறுப்பினர் எம். நடராசன் 9—12—68-ல் இயற்கையெய்தியது குறித்து அவரது குடும்பத்தினருக்குக் கிளைக் கழகச் சார்பில் இரங்கலும் ஆறுதலும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

உப்படி தி. மு க. துணைச்செயலாளர் கந்தசாமி கடந்த 18-12-68 அன்று மாரடைப்பால் திடீரென மரணமடைந்தார். தோழர் கந்தசாமி கடந்த பத்தாண்டுக் காலம் கழக உறுப்பினராக இருந்து பணியாற்றியவராவார். அவர் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு உப்பட்டி தி. மு. க. சார்பில் அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரனில் மனிதன்!

வரும் சூன் திங்களில் இறங்கக்கூடும்

"இன்னும் சில திங்களில் மனிதன் சந்திரனில் இறங்குவான்" என்று, பிரிட்டன் ஜோட்ரல் பாங்க் வானுய்வுக்கூட இயக்குநர் பெர்னர்டு லவல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

"இன்னும் பத்தாண்டுக்குள் மனிதனைச் சந்திரமண்டலத்துக்கு அனுப்புவோம்" என்று, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடி 1961-ஆம் ஆண்டு மே 21-ஆம் நாள் கூறினர்; அவர் கண்ட கனவு நனவாகும் நிலை ஏற்பட்டுவிட்டது!

அமெரிக்கா ஏவிய விண்வெளிக் கலத்தில் (அப்போலா-8) மூன்று விண்வெளி வீரர்கள் நிலவை 10 முறை வலம் வந்து பூமியை நோக்கித் திரும்பிக்கொண்டிருக்கின்றனர்.

அடுத்த ஆண்டில் சந்திரனில் மனிதனை இறக்கவும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

அமெரிக்காவின் சாதனை குறித்து இந்திய அணுசக்திக் குழுத் தலைவர் விக்ரம் சாராபாய் கருத்தறிவிக்கையில், 'இது கற்பனைக்கும் எட்டாத மிகப் பெரும் சாதனை' என்று குறிப்பிட்டுள்ளார்.

சென்னை -- கணிக இயல் சழக இயக்குநர் திரு. அல்லாடி இராமகிருஷ்ணன் கருத்தறிவிக்கையில், 'விஞ்ஞானம் தோன்றிய பிறகு நிகழ்ந்த மிகப் பெரும் நிகழ்ச்சி இது' என்ருர்; 'அணுசக்தி கண்டுபிடிப்பைவிட இது பெரிய சாதனை' என்று கூறினர்.

"பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு முதன் முதலில் இரஷ்ய செயற்கைக் கோள் விண்வெளியில் பறந்தது; ஆனல், இவ்வளவு விரைவில் மனிதர்கள் அங்கு பறந்து சென்ருர்கள் என்பதை நம்பவே முடியவில்லை" என்று அவர் மேலும கூறினர்.

சந்திரனில் மனிதனை இறக்கும் திட்டத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் விரைவுபடுத்திக் கொண்டிருக்கின்றனர். தற்போது அவர்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கொண்டு பார்க்கையில், அடுத்த ஆண்டு சூன் திங்கள் வாக்கிலேயே மனிதனைச் சந்திரனுக்கு அனுப்புவதில் வெற்றி கண்டுவிடுவார்கள் என்று நம்பப்படுகிறது.

நிலவின் தோற்றம்

"சந்திரன், வெள்ளையும் கறுப்புமான மாபெரும் நிலப்பரப்பாகும்; பிரும்மாண்டமான -- ஒன்றுமே இல்லாத பொட்டல் காடு; விரும்பத்தகாத இடம்; வசிக்க அல்லது உழைக்க -- ஊக்கம் அளிக்க இயலாத ஓர் இடம்; கால் தடயங்கள் உள்ள-- அழுக்கு நிறைந்த கடற்கரை போல் -- வெண் களிமண்போல் காணப்படுகிறது.

"சந்திரனின் இருண்ட பகுதி, குழந்தைகள் கட்டும் மணல் குவியல்போல் காணப்படுகிறது.

"எரிமலை ஒன்று குமுறுவது போல் அது தோன்றுகிறது.

"சூரியன் தோன்றுவதும் மறைவதும் பூமியில் உள்ளதுபோல் அங்கில்லை. சூரியன் தோன்றியதும் சந்திரன் முழுவதிலும் வெளிச்சம் ஏற்பட்டு, சூரியன் மறைந்ததும், வெளிச்சமும் மறைந்து விடுகிறது."

இவ்வாறெல்லாம், சந்திரனின் நிலப்பரப்பைப் பற்றி, அமெரிக்க வானவெளி வீரர்கள் மூவரும் வர்ணித்துள்ளனர்.

புதுவை மேயராக குபேர்

புதுவை, டிச. 26—

புதுவை நகராட்சித் தலைவராக திரு. குபேர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

புதுவை நகராட்சியில் உள்ள மொத்தம் 18 இடங்களில் தி.மு.க. கூட்டணிச்கு 17 இடங்களும், காங்கிரசுக்கு ஒரே இடமும் கிடைத்திருப்பது தெரிந்ததே.

மேயர் தேர்தல் நடைபெற்ற போது காங்கிரசு உறுப்பினர் தமது வாக்குச் சீட்டில் எதுவும் குறிப்பிடாததால் அந்த ஒரு வாக்கும் செல்லுபடியாகவில்லை; எனவே, ஒருமனதாக திரு. குபேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதற்கு முன்பும் திரு. குபேர் தான் புதுவை மேயராக இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமதி சரசுவதி சுப்பையா துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மற்றும் திரு. எஸ். சிவப்பிரகாசம், இலட்சுமணசாமி, கே. ஏ. ஜலீல் ஆகியோரும் துணை மேயர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருநள்ளாறு நகராட்சிக்குக் கூட்டணி வேட்பாளர் திரு. சௌந்திர ரங்கன் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கூட்டணியைச் சேர்ந்த எஸ். ஜெயராமன், ஆர். அல்லா பிச்சை ஆகியோர் துணை மேயர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பாட்டாளிகள் நிலை கண்டு போப்பாண்டவர் பரிவு

அடகு வைத்திருந்த பொருள்களை மீட்டுத் தந்தார்

பெத்லகேம், டிச. 26—

கட்டுப்பாடுகளும் நியதிகளும் நிறைந்த மத உணர்வைச் சில மணி நேரம் மறந்துவிட்ட நிலையில் -- வறுமையை அணைத்துக் கொண்டு வாழும் பாட்டாளிகளின் முன்னிலையில் -- போப் இயேசுவின் பிறந்த நாளைக் கொண்டாடினர்.

சென்ற ஆண்டு சூன் திங்களில் எகிப்து -- இஸ்ரேல் நாடுகளுக்கிடையே நடைபெற்ற போருக்குப்பின், இயேசு பிறந்த பூமியான பெத்லகேம், இஸ்லேயரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டுவிட்டது.

இந்த நிலையில்தான் போப், இத்தாலியிலேயே மிகப் பெரிய உருக்காலையின் பட்டறையில் -- தேவாலயத்தினின்றும் அப்பாற்பட்ட நிலையில் -- பாட்டாளிகளின் மத்தியில் தமக்குரிய சின்னங்களுடன் வழிபாடு நடத்தியபோது, ஏழை எளியவர்களெல்லாம் களிப்பில் ஆழ்ந்தனர். அந்த எளிய மக்களின் பரிவைக் கண்டு போப், திக்குமுக்காடினர்!

அன்ருட வாழ்க்கையில்—பணத் தேவையின் காரணமாக நகைகளையும், பாத்திரங்களையும் அடகு வைத்துவிட்டு, பின்னர் அவைகளை மீட்க முடியாமல் போய்விடுபவர்களை நாள் தோறும் நாம் சந்திக்கிரேம்.

ரோம் நகரில் வாழும் இத்தகைய ஏழைகளுக்கு போப் உதவி செய்தார். ரோம் சேமிப்பு பாங்கியில் ஏழை மக்கள் அடகு வைத்திருந்த பொருட்களை மீட்டுத் தந்தார்! இதற்காக அவர் தனியாகவே நிதி ஒதுக்கியிருந்தார்.

மாநிலத் தமிழாசிரியர் மாநாடு

அண்ணா மற்றும் அமைச்சர்கள் கலந்துகொள்கின்றனர்

மாநிலத் தமிழாசிரியர் கழக பதினேராம் மாநாடு 27-12-68 காலை 10-மணிக்கு சென்னை மவுண்ட்ரோடு சிறுவர் அரங்கில் நடைபெறுகிறது.

புலவர் நா. துரைசாமி மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.

கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் மாநாட்டைத் துவக்கிவைப்பார்.

டாக்டர் அ. சிதம்பரநாதனர் படத்தை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் திறந்துவைப்பார்.

பேராசிரியர் மயிலை சிவமுத்து படத்தை, திரு. நெ. து. சுந்தர வடிவேலு திறந்துவைப்பார்.

தமிழ்த் துறைத் தொடர்புடை நாடாளுமன்ற -- சட்டமன்ற உறுப்பினர்கட்குப் பாராட்டு வழங்கப்பெறும்.

மாலை 4-மணிக்கு அமைச்சர் திரு. மா. முத்துசாமி தலைமையில் கவியரங்கம் நடைபெறும்.

மாலை 5-மணிக்கு அமைச்சர் திரு. மு. கருணநிதி தலைமையில் கருத்தரங்கம் நடைபெறும்.

இறுதியாக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்கள்.

பேராசிரியர் மா. கி. தசரதன் வரவேற்புரையும், பேராசிரியர் அன்பு கணபதி நன்றியுரையும் ஆற்றுவர்.

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள்:—

		ரூ. காசு
24-12-68 இதழ்த் தொடர்ச்சி		1,38,000.69
உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள் மூலம்:—		
பொள்ளாச்சி வழக்கறிஞர் முத்துசாமி	10.00	
மாலைக்குப் பதிலாக	1.00	
குடந்தை வழக்கறிஞர் கோதண்டராமன்	101.00	
திருவாவடுதுறை ஆதீனம்	5,001.00	
குடந்தை ஏ. ஆர். ஆர். சீவல் கம்பெனி	101.00	
ஆர். நரசிம்மன், செயலாளர், குடந்தை யுனைடெட் ரெக்ரியேஷன் கிளப்	11.00	
குடந்தை இராசேந்திரன்	11.00	
செல்வி கலா	11.00	5,247.00
குன்னூர்-2 ஏ. தாமஸ்		5.00
ஆளவந்தான்பட்டி ப. திருப்பதி		1.00
திருவண்ணமலை நகர தி. மு. க.—செயலாளர் எம். கோதண்டராமன் பி.காம். மூலம்		120.00
அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் மூலம் (விவரம் பின்னர்)		801.00
ஆக மொத்தம்		1,44,174.69

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

28--12--68

கலவை

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு மந்தைவெளித் திடலில்; தலைவர்: கே. எல். சௌந்திர ராசன்; பேசுவோர்: க. அன்பழகன் எம்.பி., ஜி. விசுவநாதன், நா. வீராசாமி எம்.எல்.ஏ., தோப்பூர் திருவேங்கடம், வேலம் தம்பிதாசன், பா. சீராமுலு.

அரசினர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் முதல் மாநில மாநாடு

இரா. நெடுஞ்செழியன் கலந்து கொள்கிருர்

தமிழக அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களின் முதல் மாநில மாநாடு, 28—12—68 காலை 9-மணிக்கு கடலூர் -- புதுநகர் அர்ச் சூசையப்பர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும்.

ஐயம்பேட்டை தலைமையாசிரியர் திரு. ஆர். இராசகோபால் தலைமைவகிப்பார்.

கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் மாநாட்டைத் துவக்கிவைப்பார்.

திருவாளர்கள் இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., ப. உ. சண்முகம் எம்.எல்,சி., க. அறிவழகன் எம்.எல்.சி., கே. இராசா ஐயர் எம்.எல்.சி., நெ. து. சுந்தரவடிவேலு, ஏ. கே. சீதாராமன், எஸ். நரசிம்மன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அண்ணாவுக்கு அமெரிக்காவில் உதவி புரிந்த அதிகாரி

சென்னைக்கு வந்து அண்ணாவைச் சந்தித்தார்

சென்னை, டிச. 25—

முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள், அமெரிக்காவில் சிகிச்சை பெற்றபோது, அவருக்குத் தகவல் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றுவதற்காக அமெரிக்க அரசால் நியமிக்கப்பட்டிருந்த திரு. ஜேம்ஸ் வி. குரோட்டி நேற்று பம்பாயிலிருந்து சென்னை வந்தார்.

தனிப்பட்ட முறையில் இந்தியாவுக்கு வந்திருக்கும் அவர், நேற்று சென்னை வந்து முதலமைச்சர் அண்ணா அவர்களைச் சந்தித்துச் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்தார். அவர் வருகிற வெள்ளிக்கிழமை நியூயார்க்குக்குப் புறப்படுகிருர்.

மணிவண்ணன் -- கங்கா குழு

கலை நிகழ்ச்சிகள்

டிச. 26: புதூர்; 28: கொளத்தூர்; 29: பு. பாளையம்; 31: திருச்சுழி.

சனவரி 1: கடலாடி; 2, 3, 4 புதுவை வட்டம்; 9, 10: கா[illegible] வட்டம்.

போர் அச்சம்!

இலண்டன், டிச. 26—

"பெரும் பேரழிவை விளைவிக்கும் போர தோன்றும் என்ற அச்சம் உலகம் முழுமையிலும் நிலவுகிறது; வருங்காலத்தைக் குறித்து இவ்வச்சம் பெரும் திகிலை ஏற்படுத்துவதாக இருக்கிறது"

என்று கனடாவின் முன்னுள் தலைமையமைச்சர் லெஸ்டர் பியர்சன் சுட்டிக்காட்டி எச்சரித்திருக்கிருர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"கடன் வாங்கித் திட்டங்கள் போட்டோம் — நாடு வாழ — மக்கள் வாழ" என்று கூறுகிருர்கள் காங்கிரசார்! ஆசார்யா கிருபளானியும், ஜெயப்பிரகாஷ் நாராயணனும், விநோபா பாவேயும், 'காங்கிரசாட்சியில் ஏழை வாழவில்லை — திட்டம் ஏழையைக் காப்பாற்றவில்லை; ஏழை மேலும் ஏழையாகிறுன் — பணக்காரன் மேலும் பணக்காரன் ஆகிறுன்' என்று வெளிப்படையாகவே கூறிக் கண்டிக்கிருர்கள்!

"நாட்டின் பொருளாதார இயந்திரமே இந்தியாவின் 75 பெரிய குடும்பங்களிடம் சிக்கிவிட்டிருக்கிறது" என்று நிபுணர்கள் கூறுகிருர்கள்! நாடாளுமன்றத்தில் பேசுகிருர்கள் — பத்திரிகைகள் எழுதுகின்றன!

இருபது ஆண்டுக் காங்கிரசாட்சி, 75 பெரிய முதலாளிகளுக்கு மட்டுமே பயன்பட்டிருக்கிறது -- பெருமளவு! அவர்களின் மொத்தச் சொத்து 4,000 கோடி ரூபாய்! அவர்கள் தரவேண்டிய வருமான வரி பாக்கி மட்டும் 528 கோடி ரூபாய்!

'கடந்த 10 ஆண்டுகளில் இப்படி ஏய்க்கப்பட்ட தொகை 2,000 கோடி ரூபாய் இருக்கும்' என்று நிபுணர்கள் கூறுகிருர்கள்!

ஏழைக்கு வரிமேல் வரி! இவர்களுக்கு லைசென்சு மேல் லைசென்சு — பெர்மிட் -- கொள்ளை இலாபம் — கள்ள மார்க்கெட்!

இதை ஒழிக்கத்தான் 1967 வந்தது – மக்கள் நல்ல தீர்ப்பு அளித்தனர்! இப்போது நடைபெறும் இடைத்தேர்தலில், அதே நல்ல தீர்ப்பு அளிக்க வேண்டுகிறேன் -- கூட்டணி வேட்பாளர் டாக்டர் மத்தியாசுக்கு தராசு சின்னத்தில் முத்திரையிட்டு வெற்றி தேடித்தரக் கேட்டுக்கொள்கிறேன.

தமிழ்நாட்டில் கழக அரசு அமைந்தது — 'தமிழ்நாடு' என்ற பெயர் வந்தது! இந்தி ஆதிக்கம் ஒழிந்தது -- இந்தி ஆதிக்கத்தை மீண்டும் புகுத்தக் காங்கிரசு துடியாய்த் துடிக்கிறது!

நாகர்கோயிலில் காமராசர் நிற்கிருர்' என்று மயக்குமொழி பேசி ஓட்டு வாங்கிவிட்டால், மீண்டும் இந்தி ஆதிக்கம வரும்!

ஆக, சனநாயகம் தழைத்திட -- தமிழ் தழைத்திட -- மக்கள் வாழ்வு மலர்ந்திட -- மாநிலங்களின் உரிமைகள் பெருகிட -- இந்தத் தேர்தலில் டாக்டர் மத்தியாசுக்கு வாக்களித்து வெற்றி தேடித்தரக் கேட்டுக்கொள்கிறேன்."

அன்பன்

அண்ணாதுரை

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.